Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி - 13 27-05-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 98

ADVANCER
கணினி நிறுவனம், புதுக்குடியிருப்பு
எமது நிறுவனத்தில் கீழ்வரும் வகுப்புக்கள் 30.05.03 திகதி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கற்க விருப்பமுடை யோர் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.
1) Diploma in MS-office Application,
2) Certificate in MS-Visual Basic Programming. மேலதிக விபரங்களுக்கு: (சி 7318) நிர்வாகி.

### இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து

# அரசாங்கத்தின் பதில் கிடைக்கப்பெறவில்லை

# எரிக்கின் இன்றைய கிளிநொச்சி விஜயம் இல்லை!

## நோர்வேத் தூதரகப் பேச்சாளர் தோமஸ்

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகள் முன்வைத்த வடக்கு -கிழக்குப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புத் தொடர்பான அரசாங்கத்தின் பதில் நோர்வேத்தரப்பிற்குக் கிடைக்கப்பெறாமை காரணமாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்கெய்ம் இன்று வன்னி வருவதாக இருந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.**

நேற்று இரவு விடுதலைப்புலிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நோர்வே தூதரகப் பேச்சாளர் தோமஸ் ஸ்ராங்ளின், அரசாங்கத்தின் பதில் தமக்குக் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் -நோர்வே தரப்பினருக்கும் இடையில் வன்னியில் இன்று நடைபெறவிருந்த சந்திப்பு இடம்பெறமாட்டாது எனப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் கொழும்புக்கு வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்கெய்ம் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசாங்கத் தரப்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட, சமாதான செயலக

(08ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபையை வலியுறுத்திக் கூட்டமைப்பு கடிதம்

### பிரதமர் ரணிலுக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ்க்கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் கடிதம் எழுதியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவை துன்பங்களை, துயரங்களை ஈடுசெய்வதாக இருந்தால் நிச்சயமாக அதிகாரம் வாய்ந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## உள்துறை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### எதிர்க்கட்சியினர் கொண்டுவருவர்

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

எதிர்க்கட்சியினர் கொலை செய்யப்பட்டு வருவதை உள்துறை அமைச்சர் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டார் என்ற குற்றம் சாட்டியே இப்பிரேரணை எதிர்க் கட்சியினால் முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை தென்மாகாணசபை

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே-ஜப்பான் பிரதமர்கள் சந்திப்பு

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே மற்றும் ஜப்பான் நாடுகளின் பிரதமர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

இதற்காக நோர்வே நாட்டின் பிரதமர் நேற்று ஜப்பான் சென்றுள்ளார். தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகள் குறித்தும் டோக்கியோ உதவிவழங்கும் மாநாடு குறித்தும் ஜப்பானின் பிரதமருடன் நோர்வேப் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் ஈடுபாட்டை சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் விமர்சித்திருந்த நிலையில் இரண்டு நாட்டுத் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

சிறிலங்காவின் இறையாண்மைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் நோர்வே செயற்படுவதாகவும் சமாதான முயற்சியில் ஜப்பான் காட்டிவரும் ஈடுபாடு தமக்கு அதிருப்தி அளிப்பதாகவும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போது சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

## மன்னாரில் படையினர் ஆக்கிரமித்துள்ள இடங்கள் பார்வையிடப்பட்டன

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இராணுவ மற்றும் பொலிசாரின் ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் வீடுகள் மற்றும் அரச கட்டடங்கள் தொடர்பான இடங்கள் நேற்று பார்வையிடப்பட்டுள்ளன. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், இராணுவத் தரப்பினர், சிறிலங்கா பொலிஸ் தரப்பினர் ஆகிய குழுவினரே இந்த இடங்களைப் பார்வையிட்டனர்.

இவர்கள் இது தொடர்பாக தலை

(08ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான

## காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க வலய மட்டக் குழுக் கூட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையிலான காணிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான வலய மட்டக்குழுக் கூட்டம் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் இ. மௌனகுருசாமி தலைமையில் மாவட்ட செயலக மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது.

அரச காணிகளின் அத்துமீறிய குடியேற்றம், தனியார் காணிகளில் பொய்க் காணி உறுதி தயாரித்து அபகரித்தமை மற்றும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி எல்லைகளை மாற்றியமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் இனம் காணப்பட்டு எதிர்வரும் வியாழக்கிழமை வவுனதீவில் நடைபெறவுள்ள பிரதான குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பொலிஸ், இராணுவ

(08ஆம் பக்கம் பார்க்க)

### நெல்லியடியில் அரசியல் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த

## புலிகளின் தொலைத்தொடர்பு சாதனத்தை பறிக்க படையினர் முயற்சி

(வடமராட்சி)

நெல்லியடிப் பகுதியில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் பணிப் போராளிகளிடம் இருந்து தொலைத் தொடர்பு சாதனங்களை பலாத்காரமாகப்பறிக்க முற்பட்டதாக சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் முறையிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் முன்பாக உள்ள தனியார் கல்வி நிலைய மாணவரிடையே விடுதலைப் புலிகள் சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்றினை நடத்தினர்.

அவ்வேளை, அங்கு வந்த இராணுவ ரோந்துப் பிரிவினர் விடுதலைப் புலிகளிடம் இருந்த தொலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பகுதியில் பாரஊர்தி குடைசாய்ந்தது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மண்ஏற்றிச் சென்ற பாரஊர்தி ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் குடைசாய்ந்தது.

மேற்படி சம்பவம் நேற்று பி.ப.1.30 மணிக்கு ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்றது.

அவ்விடத்தில் பணிகளை மேற்கொண்டிருந்த மனிதநேய கண்ணிவெடிஅகற்றும் பிரிவினர் ஸ்தலத்திற்கு விரைந்து பாரஊர்தியில் இருந்து காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். 42-3573 என்ற பாரஊர்தியே மேற்படி குடைசாய்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## யாழ். இல் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறும்

### பல்கலை.மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

(வடமராட்சி)

உலகெங்கும் பரவி வாழும் தமிழ் மக்களிடையே எழுச்சிபூர்வமான உணர்வைத் தோற்றுவிக்க காரணமாக இருந்த பொங்குதமிழ் நிகழ்வில் ஓர் அம்சமான மற்றுமோர் எழுச்சிபூர்வமான நிகழ்வினை மேற்கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

அடுத்த மாத முற்பகுதியில் இந்த எழுச்சிபூர்வ நிகழ்வு இடம்பெற [illegible]ன்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயம் என காரணம் காட்டப்பட்டு [illegible] மீள்க்குடியேற அனுமதி மறுக்கப்பட்ட மக்[illegible]ரிமைகளை மேம்படுத்தல் மற்றும் அரச - விடு[illegible]புலிகளுக்கிடையே புரிந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

## தவறிவிட்டது

தனபாலசிங்கம் சாந்தினி என்பவருடைய அடையாள அட்டை உட்பட ஒரு தொகைப் பணம் மல்லாவிக்கும் துணுக்காய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் துணுக்காயில் இருக்கும் ஈழநாத விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (2925)


# சிறிலங்காவின் வெள்ள நிவாரணத்திற்கு எட்டுக் கோடி 90 இலட்சம் நிதி

### ஐரோப்பிய ஆணைக்குழு வழங்கும்

சிறிலங்காவில் வெள்ள நிவாரணத்திற்கென எட்டுக் கோடியே 90 இலட்சம் ரூபாவை வழங்குவதென்று ஐரோப்பிய ஆணைக்குழுவின் மனிதாபிமான உதவி அலுவலகம் தீர்மானித்துள்ளது.

இந்த உதவி யுனிசெவ், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், ஸ்பெயின் செஞ்சிலுவைச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படும் என்றும் முக்கியமாக குடிநீர், சுகாதார வசதிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் அபிவிருத்தி மனிதாபிமான உதவிக்குப் பொறுப்பான ஆணையாளர் கூறியுள்ளார்.

# திருகோணமலை கட்டைபறிச்சானில் நாளை புலிகள் - படையினர் சந்திப்பு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய சிறிலங்கா படைத்தரப்பிற்கும் விடுதலைப்புலிகள் தரப்பிற்குமிடையே நாளை புதன்கிழமை சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

மூதூர் கிழக்கு கட்டைபறிச்சானில் கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. (25)

# வீதியில் சமாந்தரமாக சைக்கிளில் சென்ற மூவருக்கு நீதிமன்றம் தண்டனை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப் பகுதியில் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் துவிச்சக்கரவண்டிகளில் சமாந்தரமாகச் சென்று கொண்டிருந்த மூவர் மீது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்றுக்காலை 9.45 மணியளவில் சன நெரிசல் அதிகளவில் காணப்பட்ட கிளிநொச்சி நகரவீதியில் விவசாயத் திணைக்களத்துக்கு முன்பாகவே வீதியால் சமாந்தரமாக துவிச்சக்கரவண்டிகளில் பயணித்துக் கொண்டிருந்த மூன்று நபர்களைத் தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் கைது செய்து கிளி. மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர்.

இவர்களை விசாரணை செய்த கிளி. மாவட்ட நீதவான் மூன்று நாள் மறியலில் வைக்குமாறு தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இவ்வாறு வீதியால் சமாந்தரமாக துவிச்சக்கரவண்டிகளில் பயணிக்கும் பயணிகளுக்குத் தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் ஆங்காங்கே வீதிகளில் மறித்து வீதி நடைமுறை தொடர்பாக விளக்கமளித்து வருகின்ற நிலையிலும் அவர்களின் செயற்பாடுகளை உதாசீனம் செய்யும் வகையில் செயற்படுபவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(லோ)

## முல்லை. மாவட்டத்தில்

# சிறந்த விவசாயிகளை தெரிவதற்கான போட்டி

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாயிகள் தெரிவு இவ்வாண்டிற்கான சிறுபோகச் செய்கையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இருந்தும் மேற்படி தெரிவுகளை மேற்கொள்ள விவசாயத்திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன. இப் போட்டியில் சிறந்த நெற்செய்கையாளர், உப உணவுச் செய்கையாளர், சிறந்த வதிவிட வேளாண்மையாளர் என ஒவ்வொருவர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதில் பங்குபற்ற விரும்பும் விவசாயிகள் தமது பெயர் விபரங்களை ஆனி மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடமோ, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச செயலகத்திலோ பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## ரஞ்சித் கொலை தொடர்பாக

# கட்சி முக்கியஸ்தர்களுடன் சந்திரிகா அவசரமாக ஆராய்வு

தென்மாகாணசபை அமைச்சரும் சண்டிமல்லி என அழைக்கப்படுபவருமான ஆர். ரஞ்சித் கொலைச் சம்பவம் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கட்சியின் முக்கியஸ்தர்களை அவசரமாக அழைத்துப்பேசியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் தமது பாதுகாப்புக் குறித்து விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இதேவேளை சம்பவம் நடந்த இடத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உடனடியாகச் சென்று பார்வையிட்டிருக்கிறார்.

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சிநெறி ஆரம்பம்

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான கணினிப் பயிற்சிநெறி கடந்த 23 ஆம் திகதியன்று கிளி. மாவட்ட கூட்டுறவுச்சபையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிளி. மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் 20 பணியாளர்களில் முதற்கட்டமாக ஒரு சங்கத்திலிருந்து ஒருவர் வீதம் மேற்படி பயிற்சியில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் கூட்டுறவுச் சபைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.கந்தசாமி, நிர்வாக சேவை நிதிப் பொறுப்பாளர் நகுலன் ஆகியோர், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)


# SEWA LANKA FOUNDATION

## TENDER NOTICE

## SUPPLY OF CADJANS

Sewa Lanka Foundation is a national Non-Governmental Organization and has been in service to the needy public of Sri Lanka for over 10 years. We plan to construct temporary shelter for returnees in Kilinochchi and Vavuniya districts in their original villages and this vital need is generously funded by the European Commission Humanitarian Aid Office (ECHO) through German Agro Action.

Sealed Tenders are invited for the supply of Cadjan up to 4.00 p.m. on 5th of June 2003. Late tenders will not be accepted.

| Item | Breadth | Length | Quantity |
|---|---|---|---|
| Cadjan | 1.5' | 5' or more | 297500 pairs |

**Special conditions pertaining to the supply of Cadjan**

1. Colour should be dark brown.
2. Without any perforations in the leaves.
3. Unbroken stem.
4. Each Cadjan should not be less than 5 feet long and 1' 5" wide.
5. Each Cadjan should be delivered in bundles of 25 pairs of Cadjan per bundle.
6. Transport cost should be separately stated with the lorry capacity to deliver to Kilinochchi and Vavuniya suburbs.

**General Conditions**

1. Mode of payment required.
2. Maximum quantity that can be supplied per month.
3. Varieties of items offered and their quality.
4. Availability of credit facilities, if required by us.
5. Whether sample could be provided for selection and guarantee to supply same quality of items selected until completion of order.
6. Guarantee of delivery to the destinations as required by Sewa Lanka Foundations.
7. Transport facilities available.
8. Validity period of the quotation for each item.

Prepared quotation as per laid down conditions should be sent by registered post addressed to the Secretary Tender Board or deposited in the Tender Box placed at the Head Office to reach on or before 5th June 2003 at 4p.m.

Regional Director
Regional Head Office,
Sewa Lanka Foundation,
Karadipokku Junction,
A9 Road,
Kilinochchi.

(கி-8727)


# தமிழீழ சட்டக்கல்லூரி 2 ஆம் ஆண்டு விரிவுரைகள் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சட்டக்கல்லூரியின் இரண்டாவது அணியின் இரண்டாவது ஆண்டுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி கற்கைநெறியானது எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ சட்டக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது என தமிழீழ சட்டக்கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (பா)

# சோழன் சிறுவர் பூங்காவின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

விசுவமடு இளங்கோபுரம் சோழன் சிறுவர் கல்விஊட்ட மேம்பாட்டுப் பூங்காவின் விளையாட்டு விழாவும் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவும் நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஜேர்மன் கிளையின் அனுசரணையுடன் சமூக மேம்பாட்டு நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் இச்சிறுவர் இல்லத்தில் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும், சிறுவர் இல்ல விளையாட்டு விழாவும் நாளை, பிற்பகல் 2:30 மணிக்கு சிறுவர் பூங்காவின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (பா)

# கிளி. நீர்ப்பாசனத்திணைக்கள கட்டடம் அமைப்பதில் தடங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட நீர்பாசனத் திணைக்களம் அமைப்பதற்கு போதிய அளவு காணி ஒதுக்கிக் கொடுக்கப்படாததால் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கான கட்டடங்கள் அமைப்பதில் தடங்கல் ஏற்பட்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இத்திணைக்களத்துக்கான கட்டடங்கள் அமைப்பதற்கான நிதியாக பதினைந்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பொருத்தமான இடத்தில் போதிய அளவில் காணி ஒதுக்கீடு செய்யப்படாததால் இக்கட்டடங்களை அமைப்பதற்கான பணியில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக இத்திணைக்களத்தின் கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. விரைவாக கட்டடங்கள் அமைக்கப்பட்டு பணிகள் விரைவாக மேற்கொள்ளும் பட்சத்திலேயே முழுமையான பணியினை விவசாய மாவட்டமாகிய கிளிநொச்சி மாவட்டத்துக்கு வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# அமெரிக்க நகரங்கள் மீது தாக்குதல் இணையத் தளத்தினூடாக எச்சரிக்கை!

## - பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு

நியூயோர்க், வாஷிங்டன் நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்' போவதாகவும், அங்குள்ள முஸ்லிங்கள் வெளியேற வேண்டும் என்றும் இணையத்தளம் மூலம் வந்த தீவிரவாதிகளின் எச்சரிக்கையை யடுத்து அமெரிக்காவில் உஷார் நிலைமையை ஏற்படுத்தப்பட்டுள்ளது..

நியூயோர்க், வ்வாஷிங்டன் நகரங்களில் அல்கைதா தீவிரவாதிகள் கட்டடங்கள் மீது விமானங்கள் மோதி தற்கொலைத்தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து அமெரிக்காவில் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

வெளிநாடுகளிலிருந்து வருவோர் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

இந்நிலையில் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்த மையைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு தீவிரவாதிகளிட மிருந்து தொடர்ந்து எச்சரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றது.

தீவிரவாதிகளிடையே நடந்த உரையாடலை இடை மறித்துக் கேட்டதாலும், அமெரிக்க உளவுத்துறையின் செயற்கை கோள் அனுப்பிய தகவல்களிலிருந்தும் இந்த எச்சரிக்கைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

இந்நிலையில் அபுதாவியிலி ருந் து வெளியாகும் இணையத்தளமொன்று அடுத்த 48 மணி நேரத்தில் நியூயோர்க் வாஷிங்டன் உள்ளிட்ட கடற்கரை ஓர நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் இந்நகரங்கள் மீது வாழும் முஸ்லிம்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற வேண்டும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



இஸ்ரேலிய துருப்பினரின் கண்ணீர்ப்புகையிலிருந்து தப்புவதற்காக ஓடிச்செல்லும் பலஸ்தீனச் சிறுவர்கள்.

## உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம்!

அல்ஜீரிய நில நடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தை எட்டும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 2047 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 9000 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந் நாட்டின் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

# பலஸ்தீன தேசம் உருவாகும் திட்டத்திற்கு இஸ்ரேல் முதல் தடவையாக அங்கீகாரம்!



அமெரிக்கத் தாக்குதலில் சிதைந்துபோன ஈராக்கிய கவச வாகனங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

## அமைச்சரவையின் பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது

**மத்திய கிழக்குப் பகுதியில் அமைதியை ஏற்படுத்தும் அமெரிக்காவின் திட்டத்திற்கு இஸ்ரேல் அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.**

**இதன் மூலம் மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் தனி மாநிலம் அமைத்துக் கொள்வதற்கு பலஸ்தீனர்களுக்கு உரிமையுள்ளது என்று முதன் முறையாக அந்நாடு ஒப்புக் கொண்டுள்ளது.**

03 கட்டங்களில் ஏற்படுத்தப்படும் இந்த அமைப்பின் திட்டம் 2005 ஆம் ஆண்டிற்குள் பலஸ்தீன மாநிலத்தை உருவாக்க வகை செய்கின்றது.

இத்திட்டத்தைச் சென்ற மாதம் பாலஸ்தீனர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பிரதமர் ஏரியல் ஷெரோன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்வுத் திட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது 12 பேர் ஆதரவாகவும் 07 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பில் நான்கு பேர் கலந்து கொள்ளவில்லை.

லிக்கூட் கட்சியில் இருந்தும் தேசியக் கூட்டணியில் இருந்தும் சில அமைச்சர்கள் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

06 மணி நேரம் நடைபெற்ற இக் கூட்டத்தில் பேசிய ஏரியல் ஷெரோன் நாட்டைப் பொருளாதார தேக்க நிலையிலிருந்து மீட்டதற்கு இந்தத் திட்டத்தை அங்கிகரிக்க வேண்டியது அவசியமாகிறது என்று வலியுறுத்தியுள்ளார். அதேவேளை மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்திற்கு இஸ்ரேலின் ஒப்புதல் கிடைத்திருப்பதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இதனை அடுத்து இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் பாலஸ்தீன வெளியுறவு அமைச்சரைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அமெரிக்க சனாதிபதியால் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச மாநாடு அடுத்த மாத ஆரம்பத்தில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



பாக்தாத்தில் கைவிடப்பட்ட ஆயுத தொகுதியொன்றிலிருந்து விமான எதிர்ப்பு துப்பாக்கியின் பகுதியை கழற்றி எடுக்க முயலும் ஈராக்கியர் ஒருவர்.

# ஆஷே தீவிரவாதிகள் வெற்றி பெற்றால் தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஆபத்து!

## அவுஸ்திரேலிய அரசு எச்சரிக்கிறது

(மெல்பேர்ன்)

இந்தோனேசியாவின் ஆஷே மாகாணத்தில் தீவிரவாதிகள் வெற்றிபெற்றால் தென்கிழக்காசிய நாடுகளில் மிகவும் மோசமான பாதுகாப்பு நிலைமைகளைத் தோற்றுவிக்கும் என்று அவுஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் அலக்ஸ்சாண்டர் டவுனர் தெரிவித்துள்ளார்.

ஆஷே தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு அவுஸ்திரேலியா ஆதரவு அளிக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆஷே தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஷே தனிநாடு உருவாக்கப்பட்டால் அது இந்தோனேசியாவின் முடிவுக்குக் காரணமாக அமையும் என்று அலெக்சாண்டர் டவுனர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உக்ரேனிய பயணிகள் விமானம் விபத்து பயணித்த 74 பேரும் உயிரிழப்பு!

உக்ரேன் நாட்டிற்குச் சொந்தமான விமானம் ஒன்று துருக்கியின் வடமேற்குப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 74 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஸ்பெயின் சமாதானப் படையினர் 60 பேரும் விமானிகள் 12 பேரும் இருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உக்ரேன் நாட்டிற்குச் சொந்தமான Y.K-42 ரக விமானம் கருங்கடலுக்கு அருகில் பறந்து கொண்டிருந்த போது மூடு பனி காரணமாக ரம்குன் நகருக் கருகில் விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தோரில் 25 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## உடல் உறுப்புக்களுக்காக குழந்தைகள் விற்பனை!

### -இத்தாலியில் கோரச் சம்பவம்

குழந்தை பிறப்பதற்கு முன்பே அதனை 2,51,000 பவுண்களுக்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்த தாயையும் அதற்கு உடந்தையாகவிருந்த தரகர்களையும் இத்தாலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குழந்தை 5 மாதங்களாக கருவில் இருக்கும் போதே, குழந்தைக்குப் பேரம் பேசப்பட்டுள்ளது.


இவ்வாறு வாங்கப்படும் குழந்தைகளில் உடல் உறுப்புகள் சத்திரசிகிச்சை மூலம் அப்புறப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவது பின்னர் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு குழந்தையை விற்பனை செய்ய முற்பட்ட 28 வயதுப் பெண்ணுடன் உக்ரேன்வாசிகள் மூன்று பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.



அமெரிக்க கடற்படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 ஆப்கானிய இராணுவ வீரர்கள் பலியானதையடுத்து காபூலில் அமெரிக்கத்தூதரகம் முன்னாள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஆப்கானிஸ்தான் இளைஞர்கள்.

# வன்னேரிக்குளம் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியின் அவலநிலை....



கணேசா வித்தியாலயம்

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் குஞ்சுக்குளம் பகுதியில் ஒரு சிறிய பாடசாலை. நாம் அந்தப் பாடசாலையை அடைந்த போது பகல் 10.00 மணி மாணவர்களையோ ஆசிரியர்களையோ எவரையும் காண வில்லை. நாம் சென்றது ஒரு புதன் கிழமை. பாடசாலை விடுமுறை நாளோ என யோசித்துப்பார்த்தோம். அவ்வாறு எதுவும் இல்லை. பாடசாலை வளவு திறந்தபடியே இருந்தது. தயக்கத்துடன் நுழைந்து வகுப்பறைகளை எட்டிப்பார்த்தோம்.


**YEAR** -5 என கரும்பலகையில் எழுதப்பட்டிருந்த வகுப்பில் சுவரோரம் இருந்த மேசையில் நித்தியகல்யாணிப் பூக்கள் வாடாத நிலையில் குவித்து வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தபோது யாரோ பாடசாலைக்கு அன்று காலை வந்திருக்க வேண்டும் என்பது புரிந்தது.

யாரைக்கேட்கலாம் என யோசித்துக் கொண்டிருந்தபோது பெண் ஒருவர் நீர்அள்ளிக் கொண்டு வீதியால் வந்து கொண்டிருந்தார். பாடசாலையின் நிலைப்பாட்டை அறிவதன் பொருட்டு அவரிடம் "தங்கச்சி இந்தப் பாடசாலை ஏன் நடைபெறவில்லை எனக்கேட்டோம்" அதற்கு அவர் "இப்ப சில நாளா பள்ளிக்குடத்துக்கு பிள்ளையள் வந்து திரும்பிப்போகுதுகள் படிப்பிக்கிறதுக்கு ஒருத்தரும் வாறயில்ல. அதால ஒரு 50 பிள்ளையள் காலமவந்து சும்மா இருந்திட்டு இப்படிதான் போகுதுகள்" என்றார்.

நாங்கள் பாடசாலை வளாகத்தைச் சுற்றி பார்வையிட்டு அவற்றை புகைப்படமாக்கியதை எங்கிருந்தோ நோட்டமிட்ட முதியவர் ஒருவர் அவரசமாக தனது துவிச்சக்கர வண்டியை ஓட்டிவந்து எம்மருகே குதித்தார். அந்த இடத்துக்கு தான் வந்து அடையுமுன் நாம் புறப்பட்டு விடுவோமோ என்ற சந்தேகத்தில் தொலைவில் வரும்போதே "தம்பியவை இந்தப்பள்ளிக் குடத்துக்கு பிள்ளையள் நெடுகவந்து வந்து பாத்திட்டு திரும்பிப் போகுதுகள் அதுவும் ஆரம்பபள்ளி படிக்கிற பிள்ளையள் தம்பி. காலமவந்து இருந்து பாத்திட்டு வீட்டை போகுதுகள் ஏதோ நிரந்தர ரீச்சர் மார் ஒருத்தரும் இல்லை யாம் எண்டு தானாம் பள்ளிக்குடம் நடக்கி றேல்லை தம்பி இப்பிடியே போனா இந்தப் பிள்ளையளின்ர எதிர் காலம் எப்பிடித்தான் போகப் போகுதோ தெரியேல்லை இத ஆரிட்ட கதைக்கிறது"

எனத் தனது கவலையை வெளிப்படுத்தி தனது கிராமத்தின் எதிர்கால செல்வங்களின் நிலை குறித்து ஆதங்கப்பட்டார். பெயர்ப் பலகை எதுவும் எமது கண்ணுக்குத் தென்படாததால் பாடசாலையின் பெயர் என்னவென்று அவரிடம் கேட்டோம் கணேசா வித்தியாலயம் என்று அவர் பதிலளித்தார். மேலும் " கொஞ்சநாளா அதிபர் மட்டும்தான் வந்து பாடசாலையை நடத்தினார். இப்ப அவரையும் காணவில்லை. இந்தச் சுற்றாடலில உள்ள பிள்ளையள் எல்லாம் இங்கதான் படிக்கிறவை" என்று அவர் மேலும் விளக்கம் கூறினார்.

" கிட்ட வேறை ஒரு பள்ளிக்குடமும் இல்லையோ?" என்று விசாரித்தோம் "வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் இருக்கு, அங்கையும் இப்படித்தான்" என்று அவர் பதிலளித்தார்.



அலுமாரிக்குள் ஆய்வு கூடம்

இந்தப் பாடசாலையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர்தூரம் சென்றால் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் உள்ளது. அந்தப் பாடசாலை யில் ஆண்டு 01முதல் 11 வரை வகுப்புக்கள் உள்ளன. ஆனால் ஆரம்பவகுப்புகளைப் பொறுத்தவரை கல்விகற்பதற்கு 5ஆம் ஆண்டுக்கு மட்டுமே நிரந்தர ஆசிரியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரும் ஆரம்ப ஆசிரியர் இல்லை.

முதலாம் ஆண்டுக்கும் இரண்டாம் ஆண்டுக்கும் இரு ஆசிரியைகள் தொண்டு அடிப்படையில் கற்பிப்பதையும் அவர்களும் சில தினங்களாகத்தான் கற்பிப்பதையும் அறிந்துகொள்ள முடிந்தது.

"இந்தப்பகுதியில் வேறு பாடசாலைகள் இயங்குகிறதா?" என அப்பாடசாலையின் ஆசிரியரைக் கேட்டோம். "வன்னேரிக்குளம் அ.த.க பாடசாலை இருக்கிறது." என அவர் பதிலளித்தார்.

வன்னேரிக்குளம் அ.த.க பாடசாலையின் நிலையும் இதுதான் என்பதை அன்றே உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆண்டு 1முதல் 9வரை கொண்டு இயங்கும் அப்பாடசாலையில் ஆண்டு ஒன்றுக்கும் ஐந்துக்கும் மட்டுமே ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அறிந்து கொண்டோம்.

"இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து" ஒரு மனிதன் தனது இளமைக் காலத்தில் கற்கின்ற கல்வியே அவனது ஆழ்மனதில் பதிந்து கொள்ளும். ஆனால் இந்தப்பள்ளி மாணவர்களின் இளமைக் காலக்கல்வி ஆசிரியர் பற்றாக்குறை எனும் கொடிய நோயால் அழிக்கப்படுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கொடுமையே. அனைவருக்கும் கல்வி, கட்டாயக் கல்வி என்று பேசப்படும் இந்நாட்களில் அதற்குப் பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகையில் பாடசாலைகளுக்குச் செல்லாது இடைவிலகும் மாணவர்களை எவ்வாறு உள்வாங்கலாம்? பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்கி பிள்ளைகளை கல்வியில் ஊக்குவிக்க என்ன செய்யலாம்? என்றெல்லாம் திட்டமிட்டுச் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு கிராமத்தில் இவ்வாறு நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பாதிக்கப்படுவது மிகவும் கொடுமையானதாகும்.

வறுமை நிலையிலும் கல்விகற்க வேண்டும் சமூகத்தில் நாமும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற நோக்கில் பாடசாலைகளுக்கு தாமாகவே விரும்பிவரும் இந்த மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வெறுமனே திட்டங்களை மாத்திரம் அறிமுகப்படுத்துவதால் என்ன பயன்?

இவ்வாறான நிலையில் வன்னேரிக்குளம் பகுதியின் பெரிய பாடசாலையாக உள்ள வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தின் ஏனையவளங்கள் பற்றி அறிந்து கொள்ளமுயன்றோம்.

பாடசாலை வகுப்பறைகள் அமைக்கப்பட்டிருந்த வளாகம் மாமரங்களால் 'சோலை போல அமைந்திருந்தது.

மாமரத்தின் கீழ் ஒரு வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் காரணத்தை அறிவதற்காக வகுப்பாசிரியரிடம் 'ஏன் இந்த வகுப்பு வெளியால நடக்குது மாஸ்ரர்' எனக் கேட்டோம். "வகுப்பறையில் இரவு மாடுகள் படுத்திருந்தது அதால பிள்ளைகளுக்குத் தெள்ளுகடிக்குது அதாலதான் வகுப்ப வெளியால நடத்துறோம்" என்றார் அந்த ஆசிரியர்.

அப்படியே பாடசாலை நூல்நிலையத்தைப் பார்ப்பதற்காகச் சென்றோம். நூல் நிலையம் திறந்தபடி எம்மை வரவேற்றவை வெளவால்கள்தான். அந்தச் சிறிய மண்டபம் முழுவதும் வெளவால் எச்சங்கள் நிரம்பியிருந்தன. இரண்டு அலுமாரிகளில் நூல்நிலையப் புத்தகங்கள் அடங்கியிருந்தன. நூலகர் எவருமே இல்லாமையால் ஓர் ஆசிரியரே பொறுப்பாக இருந்தார். அவரும் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டார் என அறியமுடிந்தது.

அடுத்து விஞ்ஞான ஆய்வு கூடத்திற்குச் சென்றோம். பொதுத் தேவைக்கான மண்டபத்தில் அது இயங்கியது. விஞ்ஞான பீடம் ஒன்றிற்கான அடிப்படை வசதிகள் எதுவும் அங்கு இல்லை.

மேசைகளிலும் இரண்டு அலுமாரிகளிலும் உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் என்பன வைக்கப்பட்டிருந்தன. ஆய்வு கூடத்திற்குத் தேவையான நீர் விநியோக வசதி, இரசாயனப் பொருட்களை அடுக்கி வைப்பதற்கான தளபாட வசதிகள் எதுவும் இல்லை. அப்போது வகுப்பறை ஒன்றினுள் உள்ள பெரிய பிளாஸ்ரிக் நீர்த்தாங்கி ஒன்றைப் பார்த்தமை ஞாபகத்துக்கு வந்தது.

அது பற்றிக்கேட்ட போது "புதிய வாட்டர்ப்பம் இருக்கு, டாங்கும் இருக்கு ஆனால், நீர் விநியோகக் குழாய்கள் அமைக்கப்படவில்லை. இதால பிள்ளைகள் தண்ணி குடிக்க வீதியைக் கடந்து மறுபுறமுள்ள கிணறுக்குத்தான் போகிறார்கள். பாடசாலை கிணற்றுத் தண்ணி "சவர்" என்று சொன்னார். "எப்படி ஆய்வு கூடம் பிள்ளைகளுக்குப் பயன்படுகிறதா?" என்று கேட்டோம். இது உண்மையில் ஆய்வு கூடத்திற்கான வசதி கொண்டிருக்க வில்லை. இரண்டு அறைப் வசதி ஆசிரியர் நின்று கற்பிக்கும் மேடை இவ்வாறு ஓர் ஆய்வுகூடம் தான் இப்பொழுது பாடசாலைகளில் அமைக்கப்பட வேண்டும். ஆனால் எம்மால் இயன்ற அளவு செய்கிறோம்." என்றார்.

ஆய்வுகூட அலுமாரியில் கணினியின் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. "ஏன் மாஸ்டர் இந்தப் படங்களை ஒட்டியிருக்கிறீர்கள், கணினி உங்கள் பாடசாலைக்கு இல்லையா? என வினாத்தொடுத்தோம்.அது எங்கட பிள்ளையளுக்கு கணினி பற்றி எதுவுமே தெரியாது. இண்டைக்கு மற்ற இடங்களிலெல்லாம் கணினியைக் கரைச்சுக் குடிச்சிட்டு இருக்குதுகள். எங்கட பிள்ளையள் கணினியைப் படத்திலாவது பார்த்து, இது தான் கணினியெண்டு தெரிஞ்சாவது இருக் கட்டும் எண்டுதான் இத ஒட்டியிருக்கிறம்" என்றார் விஞ்ஞான ஆசிரியர்.

அப்படியே மைதானப்பக்கம் எமது பார்வை சென்றது. மைதானம் முட்செடிகள் வளர்ந்து பாவனை அற்றுக் காணப்பட்டது. விளையாட்டு மைதானத்தின் மத்தியில் பெரிய பாலை மரமொன்று காணப்பட்டது. பாடசாலையின் சிறுவர் பூங்காவைப் பார்த்தோம். அது பராமரிப்பற்றுச் சேதமடைந்திருந்தது.

இந்தப் பாடசாலையில் ஆங்கிலம், உடற்பயிற்சி, சமூகக்கல்வி, அழகியற்கல்வி ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகிறது.

கடந்த காலப் போர்ச்சூழலில் பல்வேறு நெருக்கடிகள், தடைகள், பற்றாக்குறைகள் மாணவர்களின் அதிகரிப்பு என்பவற்றால் பல சிரமங்கள் மத்தியிலும் இப்பாடசாலை மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்திருக்கின்றார்கள்.

கடந்த வருடம் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஏழு மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றிருக்கிறார்கள். இவர்களில் ஆறு பேர் விஞ்ஞானப் பிரிவில் கற்கத் தகுதி பெற்றிருக்கிறார்கள். இவர்கள் கிளிநொச்சி அல்லது வேறுநகரப் பாடசாலைகளில் தமது வறுமையின் மத்தியிலும் கல்வி கற்பதை அறிந்து கொள்ளமுடிந்தது.



கவனிப்பாரற்றுக்கிடக்கும் சிறுவர் பூங்கா

மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் கல்வி கற்பதில் காணப்படும் ஊக்கமும் விழிப்புணர்ச்சியும் பயன்தரக் கூடிய நிலையில் வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைகள் இருக்கின்றனவா? என்ற கேள்வியை இம்மூன்று பாடசாலைகளின் நிலைமையும் எழுப்புகின்றது.

அ.லோகீசன்,
வேலவன்

பொதுவாக வன்னி முழுவதும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக்குறையானது இம்மாணவர்களின் கல்வி குறித்த அச்சத்தை எழுப்புவது தவிர்க்க முடியாததாகும்.

அறிவியல் உலகில்

# விண்டோஸ்

சிவபாலன்

விண்டோஸ் என்பது ஒரு பணிச் செய்ல்முறைமை என நாம் கடந்த வாரம் அறிந்து கொண்டோம். **DOS** இற்குப் பின் விண்டோஸ் 95 என்பது தனியான ஓர் ஒப்பரேற்றிங் சிஸ்ரமாக இயங்கியது. பின்னர் இதன் வளர்ச்சியாக அதாவது காலத்தின் தேவைக்கேற்பவும், கண்டுபிடிக்கப்படும் கணினி யுடன் இணைந்த உபகரணங்களின் செயற்பாட்டிற்கு மென அது வளர்ச்சி கண்டது. இவ்வகையில்

*விண்டோஸ் - **NT**
*விண்டோஸ் - 95
*விண்டோஸ் - 98
*விண்டோஸ் - 2000
*விண்டோஸ் - **XP**
*விண்டோஸ் - 2003

என மைக்றோ சொப்ற் நிறுவனத்தினால் பல பணிச் செயல்முறை மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற் றின் மூலம் கணினிகளைக் கையாள்வது மேலும் மேலும் இலகுவாக்கப்படுகிறது.

## Windows - NT

மைக்றோ சொப்ற் நிறுவனம் 1993 இல் **Windows** என்னும் ஒப்பிறேற்றிங் சிஸ்ரத்தை வெளியிட்டுள்ளது.(**NT** என்பது **New Technology** என்பதன் சுருக்கமாகும்.) இதனை அது வடி வமைத்து வெளியிட்ட போது அது அன்று பாவனையி லிருந்து தனிநபர் கணினிகளின் நினைவகத்தின் கொள்ளளவுக்கு ஏற்றதாக அமைந்திருக்கவில்லை. அதாவது பெரிய கொள் ளளவை **Operating system program** எடுத்துக்கொண்டதால் தனிநபர் கணினிகளில் செயற்படுத்த முடியாது போனது இதனால் வலையமைப்புகளைக் கொண்ட சக்தி வாய்ந்த கணினிகளுக்குரியதாக இது அமைக்கப்பட்டது.

## Windows-95

1995 இல் மைக்றோ சொப்ற் நிறுவனம் **Windows** 95 இனை வெளியிட்டது. இது பூரணமான ஒரு ஒப்பரேற்றிங் சிஸ்ரமாக அதாவது **DOS** இற்கு மாற்றீடானதாக அதனிலும் பாவனைக்கு இலகுவானதாக இருந்தது. அத்துடன் இது சாதாரண நினைவகம் குறைந்த தனிநபர்கணினிகளுக்கும் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது.

## Windows-98

இது **Windows**95 இன் மேம்படுத்தப்பட்ட ஒரு தொகுப்பாக உள்ள போதும் இரண்டிற்கும் பாரிய அளவிலான வேறுபாடில்லை என்பது பல கணினி விற்பன்னர்களின் கருத்தாகும். ஆனால் இதில் உள்ள முக்கிய விடயம் இணை யப் பயன்பாட்டுக்கான கட்டளைகளாகும். அத்துடன் ஒரே தடவையில் எட்டுத் திரைகளிலிருந்து வரும் கட்டளை களைச் செயற்படுத்தும் வல்லமை கொண்டதாக இருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

## Windows-2000

மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் பயன்பாட்டாளருக்கு மிகவும் இலகுவாக உள்ள வகையில் அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது **Windows** 2000 ஆகும். ஏனைய **Windows** தொகுப்புகளை விட சிறந்த முறையில் இது அமைக்கப் பட்டுள்ளது எனினும் பல கட்டளைகள் ஒத்தனவையாகவும் உள்ளன.

## விண்டோஸ்-XP


விண்டோஸ் **XP**-2001 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. **XP**-என்பது (**Experience**) என்பதிலிருந்து பெறப்பட்டுள்ளது. அதாவது அனுபவம் என்னும் ஆங்கிலச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. அதாவது விண்டோஸ் 2000 வரை பயன்பாட்டாளர் பெற்ற அனுபவத்தின் அடிப்படையிலும் மேலும் பல புதிய அம்சங்களின் தொகுப்பாக இது உருவாக்கப்பட்டது.

இத்துடன் இது முற்றுப் பெற்றுவிடவில்லை புதிய தயாரிப்புகள் தொடர்கின்றன. இதேவேளை வேறு நிறுவனங்களால் ஆக்கப்பட்ட முறைமை மென்பொருட்களும் உள்ளன.

## லினக்ஸ்

லினக்ஸ் என்பது வின்டோசைப் போலவே ஒரு ஒப்பரேற்றிங் சிஸ்ரமாகும். பின்லாந்து நாட்டைச் சேர்ந்த லினஸ் ரோவால்ட்ஸ் என்பவர் அசெம்பிளி லாங்குவேஜின் உதவியுடன் இதனை ஆரம்பத்தில் உருவாக்கினார். பின்னர் பல்வேறு விற்பன்னர்களின் அயராத உழைப்பினால் இது வளர்ச்சி யடைந்த இதற்கு 1998 இலேயே அங்கீகாரம் கிடைத்தது. பின்னர் 1999இல் விற்பனை பெருகியது.

இன்று உலகளாவிய ரீதியில் கணினிமென்பொருள் துறை




போட்டிமிக்க ஒன்றாக மாறிவிட்டது. மைக்கிறோ சொப்ற், போர்லண்ட், சன்மைக்கிரோசிஸ்ரம், ஓரக்கிள் போன்ற நிறு வனங்கள் தீவிரபோட்டியில் ஈடுபட்டு புதிய புதிய மென் பொருட்களை வெளியிடத் தொடங்கியுள்ளன. இவை பல்வேறு பணிகளுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்படுகின்றன. இதனால் பயன்பாட்டாளர்களுக்கு கணினிகளைக் கையாள்வது இலகு வாக்கப்படுகிறது.

# பாடசாலைகளில் தஞ்சமடைந்தோர் பலாத்காரமாக வெளியேற்றம்!

## -இரத்தினபுரியில் மக்கள் நிர்க்கதி

இரத்தினபுரியில் கடந்த பல தினங்களாகப் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருந்த சுமார் 5000 அகதிகள் பலாத்காரமாக வெளி யேற்றப்படுள்ளனர்.

பாதுகாப்பில்லாத இருப்பிடங் களில் வசிக்க வேண்டாமென இரத்தினபுரி மாநகர சபையும் வேறு உள்ளூராட்சி சபைகளும் அரசியல் தரப்புக்களும் அறிவுறுத்தல் வழங்கி யிருக்கின்ற நிலையில் மேற்படி அகதிகள் வெளியேற்றப்பட்டுள் ளமையினால் அவர்கள் மேலும் நிர்க்கதியாகியுள்ளனர்.

சில பாடசாலைகள் ஆரம்பிக் கப்படவுள்ளதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இதுவரை அதிகாரிகள் நடவடிக்கை மேற் கொள்ளாமையினால் பாதுகாப்பில் லாத பல்வேறு இடங்களில் இவர் கள் தஞ்சமடைந்துள்ளனர்.

# கிணற்றில் வீழ்ந்த மகனை தாயார் குதித்து மீட்டார்!

(வட்டக்கச்சி)

ஆழமான கிணற்றில் தவறி வீழ்ந்த பத்து வயதுச் சிறுவனைத் தாயார் குதித்துக் காப்பாற்றிய சம்ப வம் வட்டக்கச்சி சில்வா வீதியில் அண்மையில் இடம் பெற்றது.

யதார்த்தன் என்ற சிறுவனே காப்பாற்றப்பட்டான். தவறி வீழ்ந்த சிறுவனையும், சிறுவனை மீட்கக் கிணற்றில் குதித்த தாயாரையும் பின் கணவன் மீட்டெடுத்தார்.

தாயும், பிள்ளையையும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். (12)

# சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. ஒன்றிணைந்து செயற்படுவதில் தொடர்ந்தும் இழுபறி!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஒன்றி ணைந்து செயற் படுவது குறித்து இழுபறி நிலை காணப்பட்டு வருகின்றது.

இந்த இரு கட்சிகளுக்கு மிடையில் ஒன்றிணைந்து செயற்ப டுவது குறித்து இணக்கம் ஏற்பட் டிருக்கின்ற போதிலும் கட்சியாகப் பதிவு செய்வதில் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. கட்சியாகப் பதிவு செய்யுமிடத்துஎந்தச் சின்னத் தைப் பயன்படுத்துவது என்பது தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இரு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதில் தொடர்ந்து இழுபறி நிலையே உள்ளது.

# அமெ.விற்கான பிரதித்தூதுவர் கனடாவிற்கு இடமாற்றம்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான இலங்கை யின் பிரதித் தூதுவராகக் கடமை யாற்றிய பூலோகசிங்கம் கனடா வுக்கான பிரதித்தூதுவராக இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள இலங்கைத்தூதரக அதிகாரிகளி னதும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரி னதும் நெருக்குதல் காரணமாகவே இவர் இடம்மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மாகாண கல்வியமைச்சு ஊழல் பலர் சி.ஐ.டி விசாரணையில்!

(கொழும்பு)

மத்திய மாகாண கல்வி அமைச் சில் நடைபெற்றுள்ள பலகோடி ரூபா ஊழல் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நாற்ப திற்கும் மேற்பட்டோரை தற்போது விசாரணை செய்துள்ள னர்.

பல்வேறு கருத்தரங்குகள் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் ஆலோச கர்களாலும்,போதனாசிரியர்கள், விரிவுரையாளர்களாலும் நடாத்தப் பட்டு செலவு கணக்குகள் காட்டப் பட்டுள்ளமையும், அதில் போதனா சிரியர்கள் விரிவுரையாளர்கள் கையொப்பம் இட்டுள்ளமையும் போலியானது என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

போதனாசிரியர்கள், விரிவுரை யாளர்கள் விசாரணையின் போது அத்திகதிகளில் கருத்தரங்குகள் நடைபெறவில்லை என்பதை ஒத்துக் கொண்டுள்ளனர்.

இந்த ஊழல் தொடர்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரும், கணக்காய்வாளர் ஒருவரும் ஏற்க னவே விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உழவு இயந்திரம் மோதியதில் சிறுவனொருவன் படுகாயம்!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதிப் பகுதியில் உழவு இயந்திரம் மோதிய தில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

15 வயது மதிக்கத்தக்க சிந்துஜன் என்பவரே படுகாய மடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிறுவன் அக்கராயன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (12)

# தேசிய மாநாடு பிற்போடப்பட்டது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாடு பிற்போடப்பட் டுள்ளது.

தென்னிலங்கையில் ஏற்பட்ட இயற்கையின் அனர்த்தங்களினால் பெருமளவான மக்கள் பாதிக்கப் பட்டுள்ள நிலையில் இந்த மாநாட் டினை நடத்துவது உசிதமானது அல்லவென்று கருதியே இந்த மாநாடு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டாக்காலி மாடுகள் தொல்லை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

மேற்படி கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்தும் அறிவித்தல் பல கால்நடைகளை கட்டிவளர்ப்பதை கைவிட்டுள்ளனர். இதனால் இவை கட்டாக்காலியாகப் பயிர் நிலங்களை அழிக்கின்றன.

கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்ப்பினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (12)


# பற்றைக்காடுகள் சூழ்ந்து கைவிடப்பட்டுள்ள பரந்தன் தபாலகம் புனரமைக்கப்படுமா?

(அலுவலக செய்தியாளர்)

**இராணுவ நடவடிக்கை காரணமாகச் சேதமடைந்துள்ள பரந்தன் தபாலகம் தற்போதும் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படாது கட்டட வளாகத்தைச் சுற்றி பற்றைக்காடுகள் வளர்ந்து கைவிடப்பட்ட நிலையில் உள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.**

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாகப் பரந்தன் தபாலகத்தின் பாரிய இரண்டு மாடிக் கட்டடம் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலாலும் மற்றும் விமானத் தாக்குதலாலும் பலத்த சேதமாக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது ஏற்பட்டுள்ள இயல்பு சூழ் நிலையிலும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் பற்றைக் காடுகளால் சூழப்பட்டு பாழடைந்த கட்டடமாகக் காட்சியளித்தவண்ணம் உள்ளது.

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாகப் பரந்தனிலிருந்து இடம்பெயர்ந்து மேற்படி தபாலகம் தருமபுரத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தது.



சோதி

தற்போது ஏற்பட்டுள்ள இயல்பு சூழ் நிலையினை அடுத்து மீண்டும் பரந்தன் தபாலகம் பரந்தனில் உள்ள தற்காலிக சிறிய கட்டடமொன்றில் தற்போது இயங்கி வருகின்றது.

கிளிநொச்சி நகரில் மீண்டும் சகல திணைக்களங்களின் கட்டடங்கள் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று அந்தந்தக் கட்டடங்களில் திணைக்களங்கள் இயங்கி வரும் வேளையில் பரந்தன் தபாலகம் மட்டும் திருத்த வேலைகளோ அன்றி புனரமைப்பு வேலைகளோ இடம்பெறாது தற்போது தற்காலிக சிறியகட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே பரந்தன் தபாலகம் மீண்டும் புனரமைக்கப்பட்டு சொந்த இடத்தில் இயங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாதாவென பரந்தன் வாழ் மக்கள் தங்கள் ஆதங்கங்களை தெரிவித்துள்ளனர். (சோ)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு 1944 வெற்றிடம்!

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 1944 ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரியவருகின்றது. வட-கிழக்கிலுள்ள 1823 பாடசாலைகளில் ஆங்கிலம் போதிப்பதற்கு 3522 ஆசிரியர்கள் தேவை. ஆனால் தற்போது 1578 பேரே சேவையில் உள்ளனர்.

## ஒட்டுசுட்டான் தபாலகம் மீண்டும் இயங்க ஆரம்பிப்பு

ஒட்டுசுட்டானில் மீண்டும் தபாலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 23ஆம் திகதி காலை 10.30 மணியளவில் ஒட்டுசுட்டான் தபால் அதிபர் செ. சிவபாதசுந்தரம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. தபாலகப் பெயர்ப் பலகையினை கிராம உத்தியோகத்தர் தமிழ்ச்செல்வன் திரை நீக்கம் செய்து வைத்தார். தபாலகக் கட்டடத்தின் நாடாவினை வெட்டி ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் லோ. சின்னக்கிளி திறந்து வைத்தார்.

கருத்துரைகளை ஆயுர்வேத வைத்தியர் நா. வன்னியசிங்கம், திலீபன் மருத்துவமனை வைத்தியர் வசந்தி மாலா, சமாதான நீதவான் சிவஞானலிங்கம், முத்துஐயன்கட்டு தபாலக ஊழியர் சிவராஜா ஆகியோர் ஆற்றினர். நன்றியுரையினை ஒட்டுசுட்டான் தபால் ஊழியர் கு. முருகுப்பிள்ளை ஆற்றினார். (05)

## உலக உணவுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பொருளுதவி

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் 715 மேட்டுநில மற்றும் தாழ்நில விவசாயிகளுக்கான விவசாயப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தாழ் நிலப் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு வாளி,மண்வெட்டி, கிருமிநாசினி, பசளை என்பனவும் மேட்டுநில விவசாயிகளுக்கு காட்டுக்கத்தி, வாளி, மண்வெட்டி என்பனவும் கத்தரி,பாகல்,புடோல், பயிற்றை, வெண்டி, கறிமிளகாய், தக்காளி, கீரை, பயறு, உழுந்து போன்ற விதை தானியங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் விவசாயப் பயிர்களுக்கான பசளைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுப் பன்தங்கியுள்ள விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதுடன் விவசாயிகளின் வாழ்வு நிலை முன்னேற்றப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

## வெள்ளப் பாதிப்புப்பகுதிகளில் தொற்று நோய் பரவும் அபாயம்

(கொழும்பு)


வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளில் தொற்று நோய் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாத்தறை மாவட்டத்தில் போதிய குடிநீர் வசதி இன்மையால் தொற்று நோய் அபாயம் ஏற்பட்டுள்ளது. இடம் பெயர்ந்தோருக்கு மாத்தறை நகரப்பகுதியில் 12 முகாங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு பாரிய குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக் கிறது.

சிறிலங்கா கடற்படையினரின் உதவியுடன் இந்திய மருத்துவக் குழு ஒன்று இவர்களுக்கு மருந்துகளை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க மாத்தறை மாவட்டத்தில் பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப் பட்டிருக்கும்.

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாக் காலி நாய்களின் தொல்லை



அதிகரித்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதியில் மேற்படி கட்டாக்காலி நாய்களினால் கடியுண்ட சில மக்கள் தற்போதும் வைத்திய சாலையில் தடுப்பு ஊசி மருந்தினைப் பெற்று வருவதினைக் காணக்கூடியதாக உள்ளது.

மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்திலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்ப நிலைமை காரணமாக நாய்களுக்கு சொட்டை,சொறி நோய்கள் ஏற்பட்டுள்ளதுடன், நாய்கள் விசர் நோயினாலும் பீடிக்கப்பட்டு வருகின்றது. இது குறித்த வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில், கடும் வெப்பம் காரணமாக நாய்களுக்கு மேற்படி வருத்தங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத தொன்றெனவும், வளர்ப்பு நாய் எது, விசர் நாய் எது என்பது உடன் கண்டறிய முடியா நிலையில் நாயினால் கடியுற நேரிடின் உடன் வைத்தியசாலைக்குச் சென்று தடுப்பு மருந்தினைப் பெற்றிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (சோ)

# இடைக்கால நிர்வாகசபை வடக்கு-கிழக்கிற்கு அவசியம்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் வலியுறுத்து

வடக்கு -கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்று அவசியம் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியை அரச சார்பற்ற நிறுவன இணையத்தில் சந்தித்து கலந்துரையாடிய மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்கள்.

வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் தேவைகளையும், அபிவிருத்தித் திட்டங்களையும் சரியான முறையில் இனங்கண்டு காலத்துக்கு ஏற்றவகையில் நிதியுதவிகளை கையாள்வதற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று அவசியம் என்று மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## அமைச்சர்களின் அதிகாரங்களை பறித்தல் சனநாயக விரோதம்

மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த அமைச்சர்களின் அதிகாரத்தை நினைத்தவுடன் வெட்டி வீழ்த்தும் செயல் சனநாயகத்திற்கு விரோதமானதாகும் என சிறிலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி நளின் மகேஷ் பெரேரா கூறியுள்ளார்.

சமாதான நடவடிக்கைகளின் மூலம் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியின் பயன்களைத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் காலம் நெருங்கும் இவ்வேளையில் நாட்டில் தேவையின்றி அரசியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேலும் படுகுழியில் வீழ்த்த சனாதிபதி முயன்று வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.


25 வது பிறந்ததின நினைவலைகள்

மண்ணில் முத்தாக 1978 □ 05 □ 27



மண்ணில் வித்தாக 1995 □ 07 □ 14

வீரவேங்கை மன்னன்

லோகநாதன் - கோகுலன் (கவாஸ்கர்)

அன்பான, ஆருயிர் செல்வமே கவாஸ்கர்
இன்று உனது ஐவது பிறந்தநாள்
கண்மணியே நீ இருந்திருந்தால் என்ன மாதிரி
இருந்திருப்பாய் என்று எம் மனம் கற்பனை
செய்கின்றதடா. எத்தனை ஆண்டுகளானாலும்
எம் இதயத்தில் நிறைந்தே இருக்கிறாய்கவாஸ்கர்
விரைவில் உன்கனவு நனவாகும்.

அம்மம்மா, சித்தப்பா, சித்தி, அண்ணா,அக்காமார்,தங்கைமார் போராளிகள், சுபோதினி, தரங்கினி

நி.முகவரி- யாழ்ப்பாணம்
த.முகவரி- நெத்தலி ஆறு, விசுவமடு.

(F288)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கிலுள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-05-2003

# தீர்வை எதிர்ப்பவர்கள்!

வடக்கு-கிழக்கிற்கென இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பதைத் தாம் கடுமையாக எதிர்ப்பதோடு, அத்தகையதொரு இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானம் ஒன்றை எடுப்பாரேயானால் அவரது அரசாங்கத்தை கலைத்துவிடத் தயங்கப்போவதில்லை எனவும் சனாதிபதி சந்திரிகா எச்சரித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகம் பற்றிய விவகாரம் வெளிவந்தபோதே இதற்குச் சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து கடும் எதிர்ப்பும், எச்சரிக்கையும் வரும் என எதிர்பார்க்கப்பட்டதொன்றே ஆகும். ஆகையினால், இவரது அறிவிப்பானது எவருக்கும் அதிர்ச்சியையோ, ஏமாற்றத்தையோ ஏற்படுத்தியிருக்கமாட்டாது. சிலவேளை, சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்துசமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக் கிட்டும் என எதிர்பார்த்தவர்களுக்கும்,கூறிக் கொள்பவர்களுக்கும் இது சங்கடத்திற்குரியதொன்றாக இருந்திருக்கலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மேற்கூறப்பட்ட அறிவிப்பானது சமாதான முயற்சிகளை முன்னேற்றுவதற்கான புதிய முயற்சிகள் எதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இறங்கியிருப்பின் நிச்சயமாக அது முட்டுக்கட்டை போடும் ஒன்றாகவே இருக்கும். ஏனெனில், ஆட்சியைக் கவிழ்ப்போம் என்ற எச்சரிக்கை 'புலி வருகின்றது புலி வருகின்றது' என்பது போன்று ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு தொடர்ந்து வந்தவண்ணமுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கமே முட்டுக்கட்டை போடுவதாகவும், ஒத்துழைக்க மறுப்பதாகவும் வெளிநாடுகள் பல கருதியதுண்டு. இன்னமும் கருதுபவர்களும் உண்டு. இதனால், விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என வற்புறுத்துகின்றவர்களும் அன்றி தடை செய்வோம் என எச்சரிப்பவர்களும்கூட உண்டு.

அண்மையில்கூட, விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் ஏற்பட்டுள்ள சிக்கலைப் பேசித் தீர்த்துக் கொண்டு டோக்கியோ மாநாட்டிற்கு வரவேண்டும் என ஜப்பான் அரசு கோரிக்கை விடுத்ததுண்டு. ஆனால், இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண முடியாமல், அது பெரும் இரத்தம் சிந்தும், அழிவைத் தரும் ஆயுதப் போராட்டமாக மாறியமைக்கு சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்த அதிகாரப் போட்டியே காரணம் என்பதை அவர்கள் புரிந்துகொண்டதில்லை.

சாத்வீகப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண விளைந்த தந்தை செல்வநாயகம் அவர்களும் சரி, சாத்வீக வழி சாத்தியமற்றுப்போக ஆயுதப் போராட்டத்தைத் தலைமைதாங்கி நடத்திவரும் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களும் சரி இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக் காணத் தயாராகவே இருந்தனர். இதனால் இனப்பிரச்சினைத் தீர்விற்கான உடன்பாடுகள்கூட ஏற்பட்டன.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக்காண சிறிலங்கா அரசியல்வாதிகளின் தேசிய நலனில் அக்கறையற்ற அதிகாரப் போட்டி அரசியலானது உடன்பாடுகளை அமுல் செய்யவோ அன்றி பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணவோ இடமளிக்கவில்லை. உடன்பாட்டைச் செய்து கொண்டவர்களும் சரி, பேச்சுக்களில் இணக்கத்திற்கு வந்தவர்களும் சரி அதிகாரப் போட்டி என்ற நிலை உருவாகியதும், உடன்பாடுகளைக் கிழித்தெறியவும், பேச்சுக்களை முறித்துக் கொள்ளவும் தயாராகினர். இதனால், ஒரு சமாதான முயற்சியின் தோல்வியின் பின் அடுத்த சமாதான முயற்சிக்காகப் போராட வேண்டியவர்களாகத் தமிழ் மக்கள் இருந்தார்கள்.

அதாவது, இலங்கையில் சமாதான முயற்சிகளுக்குத் தமிழ் மக்களோ, தமிழ்த் தலைவர்களோ என்றுமே விரோதமாக இருந்ததில்லை. சிங்கள அரசியல் வாதிகளே என்றும் விரோதிகளாக இருந்துள்ளனர். ஆனால், உலகம் இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டதாக இல்லை. தமது உரிமைக்காகப் போராடிய சிறுபான்மை இன மக்கள் மீதே அவை அழுத்தம் கொடுத்தன. ஒடுக்குமுறையாளர்களுக்கு நிதியும், ஆயுதங்களும் கொடுத்தன.

ஆனால், அண்மையில், அமெரிக்கா போன்ற நாடுகள் இதனை ஓரளவேனும் புரியத் தலைப்பட்டுள்ளதாகவே உணர முடிகின்றது. இதனை அண்மையில் கொழும்பிற்கு விஜயம் செய்த தெற்காசியப் பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா றொக்கா தெரிவித்த கருத்துக்கள் ஓரளவு வெளிப்படுத்துபவையாகவுள்ளன. "சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதைவிட சனாதிபதி சந்திரிகாவிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்தே கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

அதாவது, இலங்கையில் காணப்படும் இனமுரண்பாட்டிற்கான தீர்வானது, இனங்களுக்கிடையிலான முரண்பாட்டின் வெளிப்பாட்டினைவிட அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மை அரசியல் வாதிகளின் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது. இந்நிலையில், இலங்கை இனப்பிரச்சினையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் பலம் மிக்க நாடுகள் ஒடுக்கப்படும் மக்கள் மீது - அன்றி அதற்காகப் போராடும் அமைப்பின் மீது கொடுக்கும் அழுத்தத்தினைவிட அதிகாரத்திற்குப் போட்டியிடுபவர்கள் மீது அழுத்தம் கொடுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணும் முயற்சியில் முன்னேற்றம் காணமுடியும். வழங்க வேண்டியவர்கள் தயார் இன்றியோ, வழங்க முடியாத நிலையிலோ இருக்கையில், பெறவேண்டியவர்கள் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதில் பயன் ஏற்பட்டுவிடமாட்டாது.

# இராணுவப் புலனாய்வுப் பிரிவில் செயற்படும் நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பத் திட்டம்!

## -பாதுகாப்பு அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து செயற்படும் நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பாதுகாக்க சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தத் தகவலைப் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டி 'லக்பிம' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து செயற்பட்ட பலர் கொல்லப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்ததன் பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து செயற்படும் 27 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக அண்மையில் அறிக்கை ஒன்று வெளியாகியமை தெரிந்ததே.

இந்நிலையில் இவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பராமரிக்கும் திட்டமொன்றை அரசு முன்னெடுக்கவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## -கடும் மழையின் காரணமாக-

# தேயிலைக் கைத்தொழில் பாதிப்பு: 200 தொழிற்சாலைகள் ஸ்தம்பிதம்!

(கொழும்பு)

சிறிலங்காவின் தேயிலைக் கைத்தொழில் கடும் மழை காரண மாகப் பெரும் அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளது.

இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களில் 200 தொழிற் சாலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. ஆயிரக் கணக்கான ஊழியர்கள், சிறு தேயிலை உரிமையாளர்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 50 சதவீதம் இரத்தினபுரி, காலி மாத்தறை தாழ் நிலங்களில் இருந்துதான் பெறப்படுகின்றது. இப் பகுதிகளில் 90 சதவீதமான தேயிலை உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# 'சாகரவர்த்தனா' கப்பல் கப்டனின் விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு!

கடற்படைக் கப்டன் போயாகொட கட்டளையதிகாரியாகக் கடமையாற்றிய சமயம் புலிகளின் தாக்குதலுக்குள்ளான 'சாகரவர்த்தனா' கப்பலை 36 மணித்தியாலங்களாக ஒரே இடத்தில் நங்கூரமிட்டிருந்தது ஏன் என்பதை விசாரிக்கும் கடற்படை நீதிமன்றம் அதன் அறிக்கையை கடற்படைத் தளபதியிடம் ஒப்படைத்துள்ளது.

9 வருடமாகப் புலிகளின் காவலில் இருந்து கடந்த வருடம் விடுதலை செய்யப்பட்ட மேற்படி கப்டன் அஜித் போயாகொட தற்போது இராணுவத் தலைமையகத்தில் பணியாற்றுகிறார்.

கடற்படைத் தளபதியால் ஏற்படுத்தப்பட்ட ஆரம்ப விசாரணை நீதிமன்று போயாகொடவின் விடுதலைக்குப் பிறகே அமைக்கப்பட்டது. இதன் தலைவராக ரியர் அட்மிரல் அட்டுலுகம நியமனம் பெற்றிருந்தார்.

தாக்குதல் தொடர்பாக முன்பு அவரிடம் வாக்கு மூலம் பெற முடியாமல் விட்டதால் இரண்டாம் முறையாக மேற்படி நீதிமன்றம் அமைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுள்ளன.

# உயர் பொலிஸ் அதிகாரிகள் 20 பேர் உடனடி இடமாற்றம்!

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 6 பேர் அடங்கலாக 20 சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக செயற்படுமாறு பிற மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்களில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான கிங்ஸ்லி ஏக்க நாயக்க சப்ரகமுவா மாகாணத்துக்கும் ஆரியரத்ன மேற்கிந்திய மாகாணத்துக்கும், ராஜா வீரக்கோன் கிழக்கு மாகாணத்திற்கும் மேல் மாகாணத்திற்கு காமினி சில்வாவும் நிர்வாகத்திற்குத் தர்மரத்னவும் வன்னிப் பிராந்தியத்திற்கு பத்தேவலவும் மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் சிரேஷ்ட அதிகாரிகளான விக்கிரமசிங்க பொலிஸ் தலைமையகத்திற்கும், கருணாதிலக்க பணிப்பாளர் நிர்வாகத்திற்கும், அபேவர்த்தன கட்டளைப்பீடத்திற்கும் உடவத்த அனுராதபுரத்திற்கும் மற்றும் சிலரும் மாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர்.

## -ஒரு நாள் போட்டித் தொடர்-

# மேற்கிந்தியத்தீவு 39 ஓட்டங்களால் வெற்றி; அவுஸ்.ஸின் தொடர் வெற்றிக்கும் முற்றுப்புள்ளி!

அவுஸ்திரேலிய-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஐந்தாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 39 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைக் குவித்தது.

அணியின் தலைவர் லாரா 80 ஓட்டங்களையும் ஆரம்ப ஆட்டக்காரர் கெய்ன்ஸ் 79 ஓட்டங்களையும் எடுத்து ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

வெற்றிபெற 291 ஓட்டம் பெறக் களம் புகுந்த அவுஸ்திரேலிய அணி 9விக்கெட் இழப்பிற்கு 251 ஓட்டங்களை எடுத்தது.

இவ்வாண்டு சனவரி 9 ஆம் திகதி சிட்னியில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் இலங்கையிடம் தோல்வி அடைந்த பின் தொடர்ந்து 21 போட்டிகளில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணியின் சாதனை இந்த தோல்வியின் மூலம் முடிவுக்கு வந்தது.

ஏழு போட்டிகளைக் கொண்ட மேற்கிந்தியத்தீவுக்கெதிரான இந்தத் தொடரை ஏற்கனவே 4 போட்டிகளில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி கைப்பற்றிவிட்டது.

# பங்களாதேஷ் அணியின் டெஸ்ட் அந்தஸ்தை பறிக்கும் திட்டம் எதுவும் இல்லை

## -ஆசிய கிரிக்கெட் கவுன்சில்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு வழங்கப்பட்டுள்ள டெஸ்ட் அந்தஸ்து ரத்துச் செய்யும் திட்டம் எதனையும் சர்வதேச கிரிக்கெட் பேரவை மேற்கொள்ளவில்லை என்று ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தெரிவித்துள்ளது

எனினும் பங்களாதேஷில் கிரிக்கெட்டை வளர்ச்சி அடையச் செய்வதற்கான உதவிகளை சர்வதேச கிரிக்கெட் பேரவை மேற்கொள்ள விருப்பதாக ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் அபிவிருத்தி முகாமையாளர் சகீஹுசேன் தெரிவித்துள்ளார்.

மேலும் பங்களாதேஷின் உள்ளூர் கிரிக்கெட்டை வளர்ச்சி அடையச் செய்வதற்காக 0.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக சர்வதேச கிரிக்கெட் பேரவை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு யூன் மாதம் டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்ற பங்களாதேஷ் கிரிக்கெட் அணி விளையாடிய 19 டெஸ்ட் போட்டிகளில் 18 இல் தோல்வி அடைந்துள்ளது. எனினும் எதிர்காலத்தில் சிறந்த அணியாக வரக்கூடிய தகுதி பங்களாதேஷ் அணியிடம் இருப்பதாக முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.



# எனது பொறுமையைச் சோதிக்க வேண்டாம்

## ரஞ்சித் கொலை தொடர்பாக சந்திரிகா எச்சரிக்கை

பொதுசன ஐக்கிய முன்னணியின் தென்மாகாண சபை மீன்பிடி வர்த்தக, கமத்தொழில் அமைச்சர் ஆர். எம்.ரஞ்சித் கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமை கொடூரமானதும் மிலேச்சத்தனமானதுமான நடவடிக்கை என்று கண்டனம் தெரிவித்திருக்கும் சனாதிபதி சந்திரிகா தமது பொறுமையைச் சோதிக்க வேண்டாமென அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று காலை நடைபெற்ற இக் கொலைச் சம்பவத்தையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தொலைபேசியில் அவசரமாகத் தொடர்பு கொண்ட சனாதிபதி குமாரதுங்க பொலிஸ் தலைமையகம் குற்றவிசாரணைப் பிரிவு அலுவலகம் சனாதிபதி மாளிகை என்பவற்றின் அருகே இக் கொலை இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டியிருப்பதுடன் அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறையின் நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

தமது கட்சி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுவதை இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என கடுமையாகத் தெரிவித்திருக்கும் சனாதிபதி சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட இந்த அரசாங்கம் தவறியிருப்பதால் தான் பொறுமையின் எல்லைக்கே சென்றிருப்பதாகக் கூறியுள்ளார்.

பொலிஸ் தலைமையகம், குற்றவிசாரணைப் பிரிவு சனாதிபதி மாளிகை ஆகியவற்றிக்கு அருகில் இருந்தப் பாதுகாப்பு தடைகள் அகற்றப்பட்ட பிரதேசத்தில் இந்தக் கொலை இடம்பெற்றிருப்பதாக சுட்டிக்காட்டியிருக்கும் சனாதிபதி, அரசாங்கமே இதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் மீது இது போன்ற பழிவாங்கும் படலம் தொடரும் பட்சத்தில் தாம் பொறுமையை இழந்து சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கொலை சம்பந்தமான விசாரணை அறிக்கை சனாதிபதியிடம் கையளிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கூற்றை உடனடியாக நிராகரித்த சனாதிபதி, அறிக்கை சமர்ப்பிக்கும் விடயங்கள் கேலிக்கூத்தானது எனத் தெரிவித்திருப்பதுடன் குற்றச் செயலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கூறியுள்ளார்.

# 'சார்ஸ்' நோயாளரை இனங்காண கட்டுநாயக்காவில் கருவி

(கொழும்பு)

'சார்ஸ்' நோயை இனங்காண்பதற்கு இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளைப் பரிசோதிப்பதற்கான விசேட ஸ்கானர் கருவி ஒன்று கட்டுநாயக்க் விமான நிலையத்தில் நேற்று முதல் இயங்க வைக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய இந்தக் கருவியைப் பெற்றுக்கொள்வதற்கு 75 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

சார்சுடன் செல்லும் ஒரு நோயாளியை இனங்காண்பதற்கு இக்கருவியில் பொருத்தப்பட்டுள்ளபடப்பிடிப்பு கருவியில் சிவப்பு நிறம் பதிவாகின்றது.

# கணவனை இழந்த 20 பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் போர் அனர்த்தம் காரணமாக கணவனை இழந்த பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்காக இளம் விதவைகளான இருபதுபெண்களுக்கும்தலா இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களே வழங்கப்பட்டுள்ளன.இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது. (மி)

# உத்தரப்பிரதேச மாநிலத்தில் புழுதிக்காற்றில் 15 பேர் பலி

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் வீசிய புழுதிக் காற்றில் 15 பேர் உயிரிழந்திருப்பதோடு பலர் காயமடைந்துள்ளனர். இதனால் அந்தப் பிரதேசங்களில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

கடந்த சில நாட்களாக உத்தரப் பிரதேச மாநிலத்தில் பயங்கர வெப்பத்துடன் கூடிய புழுதிக்காற்று வீசிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக நோர்வேயில் ஹக்கீம் பேச்சு

(லண்டன்)

சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலைமைகள் சம்பந்தமாகவும், முஸ்லிம்களின் பார்வையிலே என்னென்ன விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்பன சம்பந்தமாகவும் நோர்வேயின் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் விதார் கெல்ஹேசனுடனும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான விசேட தூதுவரான எரிக் சொல்கெய்மையும் சந்தித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாடியுள்ளார்.

தற்போது நோர்வேயில் இருக்கும் ரவூப் ஹக்கீம் தொலைபேசி மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பதில் கடிதம் சம்பந்தமாக இருபகுதியினருடனும் பேசியுள்ளார்.

அக்கடிதத்தில் அடங்கியுள்ள விபரங்கள் குறித்து கலந்துரையாடியதாகத் தெரிவித்த ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில்,

இடைக்கால நிர்வாக சபை குறித்த வார்த்தைப் பிரயோகம் காரணமாகத் தவறான அபிப்பிராயமும் தெற்கிலே மக்களைத் தேவையற்ற விதத்தில் உணர்ச்சிவசப்படுத்துகின்ற முயற்சிகளும் நடந்து வருகிறது.

மாற்றுத்திட்டம் பற்றிய விரிவான அம்சங்களை முழுமையாக என்னால் கூற முடியாது. இக்கடிதப் பரிமாற்றம் இடம்பெற்றதன் பின்னர் அதுபற்றிப் போதிய விளக்கத்தை எல்லோரும் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை அவசரமாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அதற்கான மேற்பார்வையைச் செய்கின்ற விதத்திலே முஸ்லிம் தரப்பிலிருந்தும் போதிய பங்களிப்பு இருக்கத்தக்கதாக அது நடைபெற வேண்டும் என்பதுதான் எங்களது எதிர்பார்ப்பு அதை வகை செய்வதற்கான ஏற்பாடும் உள்ளடக்கப்பட வேண்டும் என நான் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன்.

இது பூரணமான ஒரு இடைக்கால நிர்வாகம் என்கின்ற தவறான அபிப்பிராயம் ஏற்பட்டுவிடக்கூடாது. குறிப்பாக நிதியைக் கையாள்வதற்காக உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலேயிருந்து கிடைக்கப் பெறுகின்ற நிதி அந்த நாடுகளின் விருப்பத்தையும் கவனத்தில் கொள்ளாமல் கையாளப்படுவதென்பது கஷ்ரமான காரியம் எனவே பூரணமான இணக்கப்பாடு என்பது உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறுகின்ற பொழுது தான் அந்த ஒவ்வொரு நாடடின் இணக்கப்பாட்டுடன் செய்யப்பட வேண்டிய விடயம் என்பது சம்பந்தமாகவும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்றும் கூறினார்.

# பிலிப்பைன்சில் 2 படகுகள் மோதி 17 பேர் பலி; பலரைக் காணவில்லை

பிலிப்பைன்சில் இரு படகுகள் மோதிக்கொண்டதில் 17 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

மணிலா கடற்பரப்பில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஒரு படகு முற்றாக மூழ்கியுள்ளதாகவும் மற்றைய படகிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் படகில் பயணம் செய்த 200 பயணிகள் வரை மீட்கப்பட்டுள்ளதாகவும் காணாமற் போனோரைத் தேடும்பணி நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

கடுமையான காற்றும், கடற் கொந்தளிப்பும் மீட்புப்பணிகளில் சிரமத்தை ஏற்படுத்துவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

### அரசாங்கத்தின்...

பணிப்பாளர் பேணாட்குணதிலக ஆகியோரைச்சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தி இருந்தார்.

இதனைத் தொடர்ந்து சிறிலங்கா அரசாங்கத்தின் பிரேரணையுடன் இன்று இவர்கள் கிளிநொச்சி வருவதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

ஆயினும் அரசாங்கத்தின் பிரேரணை நோர்வேத் தரப்பினிடம் கையளிக்கப்படாததை அடுத்து இன்று இச்சந்திப்பு இடம்பெறாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இடைக்கால...

ஒரு அமைப்பு அந்தக் கருமத்தை முழுமையாக கையாளக்கூடிய வகையில் ஏற்படுத்த வேண்டும் என்பது அத்தியாவசியமானது என பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளதாக இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் என்பது ஒரு புதிய விடயமல்ல. 1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலம் தொடக்கம் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகப் பேசப்பட்டது. அதில் புலிகளுக்குப் பெரும்பான்மை இருக்க வேண்டும் என்ற கருத்து நிலவி வந்தது. இது இந்த நாட்டில் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டிய சரித்திரம்.

அரசியல் சாசனம் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தை பொ.ஐ. முன்னணியும், ஐ.தே.முன்னணியும் முன்வைத்தன அரசியல் சாசனம் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால் அதே அரசியல் சாசனத்தில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கு ஒரு தடையாகப்பயன்படுத்துவது ஒரு தவறான போக்காகும் என மேலும் அவர் தெரிவித்தார்.

### புலிகளின் தொலை...

த்தொடர்புச் சாதனங்களை பறிமுதல் செய்ய முற்பட்டுள்ளனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற தர்க்கத்தினை அடுத்து அங்கு மேலும் படையினர் குவிக்கப்பட்டு தொலைத் தொடர்பு சாதனத்தைப் பறிக்க படையினர் முற்பட்டுள்ளனர்.

இறுதியில் விடுதலைப்புலிகள் சயனைட் குடித்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டாலும் தொடர்பு சாதனத்தை தரமுடியாது என திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

இதனையடுத்து எதுவும் செய்ய முடியாத நிலையில் படையினர் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகவே கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது. (27)

### உள்துறை...

அமைச்சர் ஆர்.எம். ரஞ்சித் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக சுதந்திரமான, நீதியான விசாரணை நடத்தப்படும் என்று சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

இந்தக்கொலை குறித்து விசாரணை நடத்த அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலீஸ்மா அதிபருக்கு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, தென்மாகாண சபை அமைச்சரை கொலை செய்தோர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்ய விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இந்தக்கொலையினை பாதாள உலக கோஷ்டியினரே மேற்கொண்டுள்ளதாகவும் குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சமாதான நடவடிக்கைகளுக்கு தான் முன்வைத்த தீர்வுப்பொதி அடிப்படையாக அமைய வேண்டுமாம்

## சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு 1997 ஆம் ஆண்டு அல்லது 2000 ஆம்ஆண்டு தான்முன்வைத்த அரசியல் அமைப்பு சட்டமூலங்கள் அடிப்படையாக அமைய வேண்டும் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

இந்தச் சட்ட மூலத்திற்கு அன்று ஐ.தே.கட்சியினதும் தமிழ்க் கட்சிகளினதும் அங்கீகாரம் கிடைத்தது என மேலும் அவர் கூறினார்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் போதும் நோர்வே அரசாங்கமும், ஜப்பானும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு செய்தியாளர்கள் சனாதிபதியிடம் வினவியபோது,

நோர்வே அரசாங்கத்திடம் சமாதான நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்கும் பொறுப்பு மாத்திரமே வழங்கப்பட்டது. எனினும் இன்று அந்த நாடு இதில் இடைத்தரகராகவும் முடிவுகளை மேற்கொள்ளும் நிலைக்கு உட்பட்டுள்ளதாகவும் கூறிய சனாதிபதி அதற்கு எதிர்ப்பையும் தெரிவித்துள்ளார்.

### மன்னாரில்...

மன்னாரில் இருந்து பள்ளிமுனை வரை பார்வையிட்டனர். தொடர்ந்து மன்னார் செயலகத்தில் மாநாடு ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

உடனடியாக இவற்றில் இருந்து படையினர் விலக வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் இன்று மன்னார்தீவுக்கு அப்பால் உள்ள உயிலங்குளம், திருக்கேதீஸ்வரம், அடம்பன், சிவசக்தி ஊர் போன்ற பகுதிகளைப் பார்வையிடவுள்ளனர். (மி)

### யாழ். இல்...

ணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒருவருட காலம் கடந்துள்ள நிலையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதில் அரசு காட்டிவரும் அசமந்தம் ஆகியவற்றைக் கண்டித்துமே இந்த மாபெரும் எழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (27)

### காணிப்பிரச்சி...

முகாம்கள் அமைந்துள்ள எல்லைப் பிரதேச உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட்டு மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை இராணுவமுகாம்கள்அமைந்துள்ள பாதுகாப்பு வலயங்களையும் திங்கட்கிழமை பொலிஸ் காவல் நிலையங்கள் அமைந்துள்ள பாதுகாப்பு வலயங்களையும் பார்வையிடுவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் புலிகள் தரப்பு, முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகள் அரச அதிபர் தலைமையில் இப்பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளனர்.


**நடத்துநர் பணி நேர்முகத்தேர்வு**

**தமிழீழப் போக்குவரவுக்கழகம்**

தமிழீழப்போக்குவரவுக்கழக நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 30-05-2003, 31-05-2003 ஆம் நாள் வெள்ளி,சனி காலை 10.00 மணி தொடக்கம் பகல் 03.00 மணிவரை தமிழீழப்போக்குவரவுக்கழகம் - பேருந்துப்பகுதி புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித் தகைமை,அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

**முகாமையாளர்,**
**ஆளணி ஆளுகைப்பகுதி,**
**தமிழீழப் போக்குவரவுக்கழகம்.**

(சி-8126)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.